Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை


விலை: ரூ. 1-25

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆடி மீ 5 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 24 (21 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 202

பெண்மணிகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் ஏற்ற இறக்குமதி செய்யப்பட்ட நவீன புடவை தினுசுகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை, சுன்னுகம்.

# தமிழீழ விடுதலைப்புலிகளை இந்தியா அங்கீகரிக்கும்



ஞாயிறு இரவு சந்திப்பின் போது பூரியும், பிரபாவும் ஒன்முக நின்று எடுத்துக் கொண்ட படம். (உ)

## ஈழத் தமிழர் பிரதிநிதியாக அந்த இயக்கம் கருதப்படும்

## பிரபாகரன் தமிழர் தலைவர்

அலுவலகச் செய்தியாளர்:– கே. இரத்தினராஜசிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஈழத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு இந்தியா முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமை இரவு புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. எச். எஸ். பூரிக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடந்த சந்திப்பின்போது இந்தத் தகவல் வெளிவந்ததாக மிக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை தமிழ்மக்களின் தேசியத் தலைவராக ஏற்றுக்கொள்ளவும் இந்தியா தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதாம்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அரசியல் பிரிவின் முதலாவது செயலாளர் திரு. எச். எஸ். பூரி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தது தெரிந்ததே.

அவர் ஞாயிற்றுக்கிழமை இரவு முக்கிய சந்திப்புக்களில் கலந்து கொண்டார் என்பதும் உதயன் வாசகர்கள் அறிந்ததே.

அந்த முக்கிய சந்திப்புகளின் முதன்மையாக விளங்கிய பூரி — பிரபாகரன் சந்திப்பேயாகும்.

திரு. பிரபாகரனுடன் இயக்கத்தின் பேச்சாளர் திரு. யோகி, அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன், வன்னிப் பிராந்தியத் தளபதி திரு.மாத்தையா, யாழ்ப்பாண மாவட்டத் தளபதி திரு. குமரப்பா, பழைய உறுப்பினர் திரு. சங்கர், வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஜொனி ஆகியோர் ஞாயிறு இரவுச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை இந்தியா சாதகமாகப் பரிசிலனை செய்திருப்பதாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு புதிய பஸ்கள்

யாழ் குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் இந்தியாவில் இருந்து புதிய பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இத் தகவலை போக்குவரத்து அமைச்சர் எம். எச். முஹம்மது வெளியிட்டார்.

250 பஸ்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும். அவற்றில் கணிசமான தொகை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படும். (இ–எ)

### முச்சந்தி முரளி



வடமராட்சி இளைஞரை மீண்டும் பூஸாவுக்குக் கொண்டு போறதுக்குஅடையாளக் காட் ஒரு பொறிக் கிடங்கோ...?

### சுபநேரம்

21-07-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:–
10.31 முதல் 12.01 வரை
ராகுகாலம்:–
3.01 முதல் 4.31வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## இந்திய நிவாரண பொருள்கள்திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 21

இந்திய நிவாரணப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியம் ஒன்று இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு உணவுப்பொருள்கள் திருடப்பட்டன,

நெல்லியடி மகாத்மா படமாளிகையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இதனை அடுத்து உடனடியாக இந்த உணவுப் பொருள்கள் இந்திய செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் முன்னிலையில் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டன. (இ–10)

## வடமராட்சியில் மேலும் 80 பொலீஸார்

வடமராட்சி, ஜூலை 21

வடமராட்சியில் உருவாக்கப்பட்டுவரும் பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றுவதற்கு மேலும் 80 பொலீஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் பிற மாவட்டங்களில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் வடமராட்சிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இவர்களில் 70 பேர் தமிழர் எனவும் மிகுதிப் பத்துப் பேரும் சிங்களவர் எனவும் வடமராட்சிப் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (உ–160)

## அலஸ் கமிஷன்: நாளையதினத்துக்கு முன் தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை21

மார்ச் 30 ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## அடையாளக் கார்ட் பெற மக்கள் கூட்டம்

இராணுவத்தின் அடையாள கார்ட்பெறுவதற்காகப் புலோலி முகாமுக்கு நேற்றுச் சென்ற சுமார் 2 ஆயிரம் பேரில் 600 பேருக்கு மட்டுமே அடையாள கார்டுகள் வழங்கப்பட்டன,

அடையாள கார்ட் பெறுவதற்காக பெரும் எண்ணிக்கையானோர் வண்டில்கள், பஸ்களில் பயணம் செய்து புலோலி முகாமிற்குத் தினமும் வருகின்றனர்.

நேற்று அடையாள கார்ட் பெறுதவர்கள் 30ஆம் திகதி வரை ஏதாவது ஒரு தினத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் எனக்கூறி திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்! (உ–160)

## கருத்துத் தெரிவிக்க அமிர்தலிங்கம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 21

புதிய யோசனைகள் குறித்து கருத்துத் தெரிவிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் மறுத்துவிட்டார்.

கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தொடர்பு கொண்டபோது திரு. அமிர்தலிங்கம் இப்படிச் சொன்னார்.

இதனிடையில் இரண்டொரு தினங்களில் கூட்டணித் தூதுக்குழு புதுடில்லி செல்ல உள்ளது.

இதனை திரு. அமிர்தலிங்கம் ஊர்ஜிதம் செய்தார்.

கிழக்கு மாகாணத்தில் ஓராண்டு காலத்துக்குப் பின்னர் நடத்தப்படவுள்ளதாகக் கூறப்படும் சர்வசன வாக்கெடுப்பு பற்றி கருத்துத் தெரிவிக்கையில் அகதிகளாக வெளியேறிய தமிழர்கள் ஓராண்டு காலத்தினுள் பழைய இடங்களுக்குத் திரும்பி விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?—என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டார் (இ–எ)

## இணைப்புக்கு முஸ்லிம்கள் ஆதரவு

கொழும்பு, ஜூலை 21

கொழும்பில் சடந்த ஞாயிறு நடந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் கூட்டத்தில் பேசிய முஸ்லிம் தலைவர்கள் வடக்கு — கிழக்கு இணைப்பு சம்பந்தமான யோசனைக்கு வரவேற்புத் தெரிவித்தனர்.

''இணைப்பை வரவேற்கின்றோம்: அதே வேளை முஸ்லீம்களின் நலன்களை பாதுகாக்க முஸ்லீம் மாகாணசபை ஒன்றை வலியுறுத்த வேண்டும்''– இப்படி பேசிய முஸ்லிம் பிரமுகர்கள் தெரிவித்தனர். (இ–எ)

## நெல்லியடியில் முருகமூர்த்தி ஆலய நகைகள் கொள்ளை

நெல்லியடி முருகமூர்த்தி ஆலயத்திற்குச் சொந்தமான சுமார் 200 பவுண் நகைகள், ரொக்கப் பணம் மற்றும் ஏனைய பொருள்கள் நேற்று முன்தினம் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டன.

இவற்றைப் பொறுப்பாகப் பாதுகாத்துவந்த ஆலயப் பொருளாளரின் உடைமைகளும் சூறையாடப்பட்டன

ஆலயத்திற்கு அருகில் உள்ள பொருளாளரின் வீட்டிற்குப் பட்டப்பகலில் சென்ற சீருடை தரித்தவர்களே இக்கொள்ளையை நடத்தினர்,

கொள்ளைச் சம்பவம் நடைபெற்றபோது அந்த வீட்டுக்குச்சென்ற பக்கத்து வீட்டு வயோதிப மாது ஒருவர் அணிந்திருந்த நகைகளையும் சீருடையினர் கொள்ளையிட்டுச் சென்றனர். (உ–160)

## அடையாள கார்ட் பெறச் சென்ற நான்கு வாலிபர் கைது!

வடமராட்சி, ஜூலை 21

அடையாள அட்டை பெற்றுக்கொள்ளச் சென்ற நான்கு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள்.

வடமராட்சியில் நேற்றுமுன்தினம் தொடக்கம் இராணுவப் படையினால் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இவற்றைப் பெறுவதற்காகப் புலோலி பொலீஸ் நிலையத்திற்குச் சென்றுள்ள நான்கு வாலிபர்கள் கியூ வரிசையில் நின்றபோது இராணுவத்தினரால் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அறியவருகின்றது. (உ–160)

## உடுப்பிட்டியில் பொலீஸ் நிலையம் நேற்று திறக்கப்பட்டது

நேற்று உடுப்பிட்டிச் சந்தியில் உள்ள தனியார் கட்டிடமொன்றில் பொலீஸ் நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இத்திறப்புவிழாவில் பெரும் எண்ணிக்கையான இராணுவச் சிப்பாய்களும் உயர் அதிகாரிகளும் பங்குபற்றினர். (உ–160)

## விடுதலைப் புலிகளின் யாழ் தளபதி பொறுப்பு குமரப்பாவிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாக, முன்னர் மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாகக் கடமையாற்றிய குமரப்பா பணி புரிவார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்து சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) விபத்து ஒன்றில் சிக்கியதையடுத்து மன்னார் மாவட்டத் தளபதி ராதா யாழ் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்ருர்.

தளபதி ராதாவும் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் மரணமானதையடுத்து குமரப்பா அப் பொறுப்புகளை ஏற்றிருக்கிருர்.

இதே வேளை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான ஜொனி, வலிகாமம் பகுதிப் பொறுப்பாளராகச் செயற்படுவார் என தெரிவிக்கப்படுகிறது. (உ–10)



சந்திப்பின் பின்னர் எடுக்கப்பட்ட படத்தில் பூரிக்கு இடது புறத்தில் பிரபா காணப்படுகிருர். பிரபாவுக்கு இடப்பக்கத்தில் யோகி, சங்கர் ஆகியோரும் பூரிக்கு வலது புறத்தில் மாத்தையா, குமரப்பா திலீபன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (உ)

## யாழ்ப்பாண மக்கள் அழைத்தால் வருவேன்

### ஜனாதிபதி கூறுகிருர்

கொழும்பு, ஜூலை 21

யாழ் மக்கள் அழைத்தால் நான் அங்கு விஜயம் செய்வேன்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

கடந்த வாரம் ஜனாதிபதியை அவரின் அலுவலகத்தில் த்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார், கன்னியஸ்திரிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்று சந்தித்தது

அப்போது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து நிலைமையைப் பார்வையிடும்படி தூதுக்குழு ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டது.

அதற்குப் பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு பதிலளித்தார்:

தூதுக்குழு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து யாழ் குடாநாடு, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு தான் விஜயம் செய்தபோது ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துரைத்தது

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சில யோசனைகளையும் தூதுக்குழு ஜனாதிபதியிடம் கையளித் (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### தேவை

எமது உற்பத்திப் பொருட்களை யாழ் குடாநாட்டிலும், ஏனைய இடங்களுக்கும் வானில் சென்று விற்பனை செய்யக் கூடிய வியாபாரத் துறையில் முன் அனுபவம் உடைய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை:- அடிப்படைச் சம்பளத்துடன் கொமிஷனும் பட்டாவும் வழங்கப்படும். நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும் ROLAX Industries, றோலக்ஸ் இன்டஸ்றீஸ், 222 A, கஸ்தூரியார் வீதி, (ராதிகா ஜுவல்லர்ஸ், மேல்மாடி) யாழ்ப்பாணம். (1294)


● தம் சொந்த இடம் சென்றிருந்த

# திருமலை அகதிகள் பலர் மீண்டும் யாழ். திரும்பினர்

## எச்சரித்து விரட்டப்பட்டனராம்

வடமராட்சி, ஜூலை 21

மே மாதத்தில் இடம்பெற்ற வடமராட்சித் தாக்குதலைத் தொடர்ந்து திருகோணமலைக்குத் திரும்பிய திருமலை அகதிகளில் பலர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

1983 கலவரத்தின் பின்னர் திருமலையில் உள்ள அன்புவழிபுரம், அலஸ்தோட்டம், துவரங்காடு ஆகிய இடங்களில் இருந்து வடமராட்சிக்கு வந்து பல தமிழ் அகதிகள் தங்கியிருந்தனர்.

வடமராட்சித் தாக்குதலைத் தொடர்ந்து இவர்கள் திருமலையில் உள்ள தங்கள் பழைய இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

அங்கு அவர்கள் சிங்களக் காடையர்களினால் விரட்டி அடிக்கப்பட்டு அங்கு வசிக்கக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டனராம்.

சில பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனராம்.

இக்கதிக்குள்ளான சுமார் பதினைந்து குடும்பங்கள் அண்மையில் தென்மராட்சிக்கு வந்து சேர்ந்தன. (இ-எ-160)

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம் ஜூலை 21

யாழ் கோட்டை முகாமில் இருந்து ஞாயிறு பகல் ஒருமணி அளவில் திடீரென ஏவப்பட்ட ஐந்துக்கும் அதிகமான ஆட்லறி ஷெல் குண்டுகள் கடற்கரைப் பகுதியிலும், கொட்டடிப் பகுதியிலும் விழுந்து வெடித்தன. (உ-10)

## பயிற்சி வகுப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை21

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் சங்க ஆதரவுடன் வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய நிலையம் 'கால்நடை வளர்ப்பு பயிற்சி வகுப்புக்களை நடத்தஉள்ளது.

இவ்வகுப்புக்களில் சேர விரும்புவோர் வட்டுக்கோட்டை அரசினர் கால்நடை வைத்திய நிலைய வைத்திய அதிகாரி திருமதி எஸ். சாம்பசிவத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-161)

# மேலும் 5 ஆயிரம் பொலிஸார்

கொழும்பு, ஜூலை 21

பொலிஸ் படைக்கு மேலும் ஐயாயிரம் கான்ஸ்டபிள்கள் சேர்க்கப்படுவர்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி செப்டம்பர் 30 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

18 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்ட ஜீ. சி. ஈ சாதாரண, அல்லது என்.எ.சி ஜீ ஈ பரீட்சை சித்தி யெய்தியோரே விண்ணப்பிக்கத் தகுதி படைத்தவர்கள் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

# புதைத்த நகைகளை எடுக்கச் சென்றவர்

## படையினர் சூட்டுக்குப் பலி!

வடமராட்சி, ஜூலை 21

பாதுகாப்பிற்காகப் புதைத்து வைத்திருந்த நகைகளை எடுக்கப்போன வாலிபர் சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இந்தச் சம்பவம் திக்கம் பனம்பொருள் அபிவிருத்தி சபைக்கு அண்மையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

ம. சத்தியலிங்கம் (வயது 22) என்னும் மேற்படி வாலிபர் அண்மையில் ஏற்பட்ட இராணுவக் கெடுபிடி காரணமாக இடம் பெயர்ந்து அயல் கிராமம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்தார்.

பாதுகாப்பிற்காக நகைகளை வீட்டின் ஒரு பகுதியில் இவர்கள் புதைத்து வைத்ததாகவும் -

அதை எடுப்பதற்காக மேற்படி வாலிபர் நேற்று முன்தினம் திக்கத்தில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றதாகவும் -

அவர் மாலை வரை திரும்பாததால் பெற்றோர் அவரைத் தேடிச் சென்றபோது அவர் தனது வீட்டில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

புதைத்து வைத்த நகைகளும் அப்புறப்படுத்தப்பட்டு, சிப்பாய்களினால் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது. (உ-160)

# விடுதலைப் போர் இன்று மக்கள் இயக்கம்

## புலிகள் பிரமுகர் கூறுகிறார்

மானிப்பாய், ஜூலை 21

கெரில்லாப் போராட்டமாக ஆரம்பித்த எமது விடுதலைப் போராட்டம் இன்று மக்கள் போராட்டமாக மாறி வருகின்றது. எமது போராட்டக் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பல கஷ்டங்களுக்கு நிவாரணமளிக்க இந்திய அரசு முன்வந்துள்ளது.

அவர்களின் மனிதநேய உதவிகளை நாம் ஏற்றுக்கொண்டு எமது போராட்டத்தைத் தொடர்வோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகரான காண்டீபன், சுன்னாகம் ஸ்கந்த வரோதயா கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

வைத்தியம், கல்வி, சுகாதாரம், உணவு ஆகியன இன்றைய எமது அடிப்படைப் பிரச்சினைகள். இவை இராணுவ ரீதியிலான அடக்குமுறையினால் அடக்கப்பட்டுள்ளன. தமிழரின் கடந்தகால திறமையற்ற அரசியல் நிலையே இன்றைய எமது அடக்கு நிலைக்குக் காரணம்.

விரும்பியோ—விரும்பாமலோ எமது விடுதலைப்போராட்டத்தை அங்கீகரிக்கும் நிலைக்கு இந்தியா இன்று தள்ளப்பட்டுள்ளது. எமது போராட்டம் சர்வதேச ரீதியிலான மட்டத்துக்கு வந்துள்ளது. இந்திய தலைமைத்துவத்தை இனிமேல் தமிழ்மக்கள் நிராகரிக்க முடியாத நிலையில் உள்ளனர். எமது போராட்டங்களையும், தமிழ் ஈழத்தையும் அங்கீகரிக்குமாறு தமிழ்மக்கள் தொடர்ந்து கோஷம் எழுப்பவேண்டும்.

—இப்படி அவர் கூறினார். (உ-90)

# சாரணீய ஆசிரியருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை21

பளை மகாவித்தியாலய சாரணீய ஆசிரியர் திரு. மா. புவனேந்திரனுக்கு இன்று பாராட்டு விழா நடைபெறுகிறது.

காலை 11 மணிக்கு பளை மகாவித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகும் இந்த விழாவில் கிளிநொச்சி மாவட்டக்கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா தலைமை வகிப்பார்.

## ஆங்கில பயிற்சி வகுப்பு

பாடசாலையை விட்டு வெளியேறிய யுவதிகளுக்கான ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி உள்ளன.

இப் பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு நடைபெறும். (உ-31)

# வவுனியாவில் தங்கியுள்ள யாழ். அகதிகளுக்கு அரசஉதவிஇல்லை

வவுனியா, ஜூலை 21

வவுனியவில் தங்கி உள்ள யாழ்ப்பாண அகதிகள் பலருக்கு அரச உதவி எதுவும் கிடைக்கவில்லை.

வடமராட்சியிலிருந்தும், குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் இராணுவ நடவடிக்கை காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறி வவுனியா மாவட்டத்தில் உள்ள உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளன.

பெரும்பாலான குடும்பங்கள வவுனியா நகரச் சுற்றுடலிலும், தாண்டிக்குளம் பகுதியிலும் தங்கி உள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதில் வவுனியா மாவட்ட சர்வோதய இயக்கத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

எனினும் எல்லாக் குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என்றும், அரசாங்கத்தினால் தமக்கு இந்த உதவிகள் கிடைக்கவில்லை என்றும் பலரும் தெரிவித்திருக்கின்றார்கள். (இ-164)

உலக சமய சமாதானக்குழு

# அநுராதபுரத்திலிருந்து அமைதிப் பயணம்

## அக்டோபரில் நடக்கும்

சென்னை, ஜூலை 21

உலகசமய சமாதானக்குழு எதிர்வரும் அக்டோபரில் அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அமைதிப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இக்குழுவினர் ஐந்து நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மதுரைக்குத் திரும்பினர்.

இக்குழுவுக்கு டாக்டர் அறம் தலைமை வகித்தார்.

கொழும்பில் மதத் தலைவர்கள், சர்வோதயத் தலைவர்களுடன் குழு பேச்சுககள் நடத்தியது.

அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற ஆர்வம் கொழும்பில் உள்ளது. அதற்கான நல்ல சூழ்நிலை தோன்றியுள்ளதாக மதுரையில் வைத்து டாக்டர் அறம் சொன்னார்.

இந்த நல்லெண்ணக் குழுவில் ஜப்பான். தென் கொரியா. சிங்கப்பூர், தாய்லாந்து, பாகிஸ்தான் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர். (உ-எ)

## ஐ. தே. கவின் வருடாந்த மாநாடு

கொழும்பு, ஜூலை 21

ஐக்கியதேசியக் கட்சி செயற்குழுவின் வருடாந்த மாநாடு இம்மாதம் 25 ஆம் திகதி காலை கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

இரண்டாயிரம் உறுப்பினர்கள் வரையில் இம் மாநாட்டில் கலந்து கொள்வர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமை வகிப்பார்.

## ரூபா ஒருலட்சம் நஷ்ட ஈடு

கொழும்பு, ஜூலை 21

கடந்த 18 மாதங்களில் கொல்லப்பட்ட 20 ஊர்காவல் படையினருக்கு தலா ஒரு லட்சம் வீதம் 20லட்சம்ரூபாவை நட்டஈடாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இப்படி உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுரா பஸ்தியன் தெரிவித்தார்.

## 143 பேர் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை21

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள தங்கள் வீடுகள், கடைகள் ஏனைய சொத்துக்கள் இராணுவ கெடுபிடிகளால் சேதமடைந்திருப்பதாக நூற்றுநாற்பத்தி மூன்று பேர் முறையிட்டுள்ளனர்.

மேற்படி நஷ்டங்கள் குறித்து தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை பூநகரி பிரசைகள் குழுத் தலைவர் பொ. தங்கராசா—

பூநகரி உதவி அரச அதிபர், கிளிநொச்சி அரச அதிபர், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரசைகள் ஒன்றியணைப்புக் குழுவின் தலைமையகப் பிரதிநிதிகள் ஆகியோரிடம் கையளித்தார்.

இவர்களுக்கு மொத்தமாக ஒரு கோடி ரூபாவிற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-7)

மக்கள் முகம்

## யாழ் றோட்டரி கழகம்

யாழ்ப்பாணம், ஜூலை21

யாழ். றோட்டரிக் கழக நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: கலாநிதி ரி. விநாயகமூர்த்தி, உபதலைவர்: கலாநிதி ஆர். சுந்தரலிங்கம், செயலாளர்: என். கருணை ஆனந்தன், பொருளாளர்: கே. சிவராஜ்.

சென்ற வருடதலைவர்— வி கே. ரவீந்திரஜோதி, அடுத்து வரும் தலைவர்: பி. செல்வநாதன்.

அத்தியட்சகர்கள்: சமூகசேவை: எஸ். உருத்திரலிங்கம், கழகசேவை: சி ஸ்ரீஸ்கந்தகுமார், சர்வதேசசேவை: ஆர். பாலசுப்பிரமணியம், தொழிற்பயிற்சி சேவை: கலாநிதி [illegible] ராஜா, இதழ் ஆசிரியர்: ஆர். பி. மயில்வாகனம் உபசரணை: கே. சிவகாந்தன். (இ)

தாய்நாட்டைக்காக்க

# அணி திரளுமாறு ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 21

மோசமான பயமுறுத்தலுக்குள்ளாகியுள்ள தாய்நாட்டைப் பாதுகாக்க தேசப்பற்றுள்ள மக்கள் ஒன்று திரள வேண்டும்.

தடைசெய்யப்பட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணி முன் கண்டவாறு தென் இலங்கையில் வேண்டுகோள்விடுத்திருக்கின்றது.

பதின்மூன்று பக்க வெளியீடு ஒன்றில் முன்னணித் தலைவர் ரோஹண விஜவீரவும் உதவித் தலைவர் உபதிஸ்ஸ கமனாயக்காவும் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நாட்டின்2,500ஆண்டு காலச் சரித்திரம் உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளின் படையெடுப்புப் பய முறுத்தல்கள் பற்றிக் கூறுகின்றன.

அப்படியான சந்தர்ப்பங்களில் தேசப்பற்றுள்ள மக்கள் ஒன்று திரண்டு ஐக்கிய சுதந்திரப் போராட்டத்தை நடத்தினர்.

இலங்கையை சோழ மன்னர் ஆக்கிரமிக்க எடுத்த முயற்சி பற்றியும் இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# சிறில் தலைமையிலேயே முல்லைத்தீவில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கூட்டுப் படைகளின் தளபதி சிறில் ரணதுங்க தலைமையிலேயே முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினரின்தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது.

இவருடன் மேஜர் கொப்பேகடுவவும் சென்றிருந்ததாகக் கூறப்படுகிறது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேடுதல் நடத்துவதற்கென விசேட அதிரடிப் படையினரும் மேலதிக படையினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளையடுத்து தற்பொழுது புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட படையினர் தற்பொழுது தமது சொந்த முகாம்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு [illegible] முல்லைத்தீவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-10)

## சடலம் கண்டுபிடிப்பு

நெடுங்கேணி, ஜூலை 21

நெடுங்கேணி ஒலுமடுக் கிராமத்தில் தம்பையா நற்குணம் என்பவரின் சடலம் எரிந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது

40 வயதான இவர் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை.

கடந்த எட்டாம் திகதி படையினர் டொலர் பாம், கென்ட்பாம் இராணுவ முகாமில் இருந்து நடைபவனியாகப் புறப்பட்டு நயினமடு கிராமத்தை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

பின்னர் ஐந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்து கொண்டு சென்றனர். அதன் பின்னரே மேற்படி சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. (உ-எ-108)

# மண்டைதீவுப்பகுதியில் 300க்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிப்பு

மண்டைதீவு, ஜூலை 21

கடல் வலையச் சட்டத்தினால் இப்பகுதியை சேர்ந்த 300க்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் தொழிலுக்கு செல்லாது அரசினால் வழங்கப்படும் நிவாரணத்தைக் கொண்டு அரைவயிறும் கால்வயிறுமாக காலத்தைக் கொண்டு செல்கின்றன.

வழமையாக ஜனசந்தடி பிரதேசமாக காட்சி தரும் மண்டைதீவு கடற்கரை பிரதேசம் கடந்த [illegible]ன்று வருடங்களுக்கு மேலாக வெறிச்சோடிக் கிடக்கின்றது.

வெளி இடங்களிலிருந்து காலத்துக்கு காலம் இங்கு வந்து வாடி அமைத்துதொழில் செய்யும் மீனவர்கள் இராணுவ கெடுபிடி காரணமாக இங்கு வருவதில்லை.

இதனால் இப்பகுதிகளில் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-88)

## ஆலயத்தில் திருட்டு

ஊர்காவற்றுறை, ஜூலை 21

சரித்திரப் பிரசித்தி பெற்ற சுருவில் ஐயனார் தேவஸ்தானத்தின் கூரையைப் பிரித்து உள்ளே சென்ற திருடர்கள் ஆலய மடப்பள்ளியில் இருந்த பெறுமதி மிக்க பொருள்களையும் மற்றும் சில வெள்ளியிலான பொருள்களையும் பெறுமதி வாய்ந்த வைரவர் சூலம் ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்,

இச்சம்பவம் கடந்த புதன்கிழமையன்று அதிகாலை நடைபெற்றிருக்கிறது, (உ-16)


பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★ KUWAIT

● பின்வரும் வெற்றிடங்கள் எம்மிடம் உடனடியாக நிரப்ப இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

✱ ஆண் ✱ பெண் இரு பாலாருக்கும் ஓர் அரியசந்தர்ப்பம்

✱ ஆஸ்பத்திரி வேலையாட்கள் HOSPITAL CLEANERS

1. Male Cleaners ஆண் வேலையாட்கள்
2. Male Supervisors ஆண் மேற்பார்வையாளர்
3. Female Cleaners பெண் வேலையாட்கள்
4. Female Supervisors பெண் மேற்பார்வையாளர்

✱ 3 வருட ஒப்பந்தம்

✱ இலவச தங்குமிடவசதி

✱ ஒருவருட முதிர்வின் பின் வீடுவந்து செல்ல பிரயாணச்சீட்டு வசதி Return Ticket (First Class)

● பின்வரும் ஆவணங்களுடன் உடனே வரவும்

I. பாஸ்போட் Pass Port
II. பாஸ்போட் போட்டோ பிரதி PassPort Photo Stat
III. கிராமசேவையாளரின் நற்சான்றுப் பத்திரம் Grama Sevaga Certificate
IV. பாஸ்போட்சைஸ்-புகைப்படம்07(ஏழு) Pass Port Size Photo 0

● இம்மாத இறுதியில் பிரயாணம்

முக்கிய குறிப்பு:-

★ எக்காரணம் கொண்டும் வேறு முகவர் ஊடாக வரும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

தலைமை அலுவலகம்:

Construction & Development Company Ltd.

37, S. DE.S. JEYASINGHE MAWATHA NUGEGODA.

Labour Licence No. 96

★ BES ENGINEERING CORPORATION — KUWAIT

இதற்கு வேலையாட்கள் Labourers இன்னமும் தேவையாக இருக்கின்றபடியால் விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

LABOURERS 40 K. D.

★ இலவச தங்குமிடவசதி
★ இலவச உணவு வசதி
★ நாலு வருட ஒப்பந்தம்
★ இரண்டு வருட முதிர்வின் பின் வீடு வந்து செல்ல பிரயாணச் சீட்டு வசதி

தொடர்பு:

V. P Balasubramaniam (V. P. BALA)

C/o N. V. PONNUTHURAI School Lane, KONDAVIL.



VACANCY FOR MECHANICAL ENGINEER

Walk In Interview

We are looking for a Mechanical Engineer with Engineering Degree or equivalent for immediate engagement for our vast expanding Engineering Company.

Please call for an interview on 22nd July 1987 at 9-30 a.m. in our Company Office with all your certificates and documents.

Promoters Engineering Company always look for quality.

We say it and our customers confirm this.

PROMOTERS ENGINEERING COMPANY LTD.
844, Point Pedro Road,
NALLUR - JAFFNA.

(3216)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பணம் வருமுன் செலவுகளை உண்டாக்காதே.

— ஜெபர்ஸன்

**உதயன்**

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
21 07.1987 த.பெ.இல: - 23

# இத்தனைக்கும் பின்னர் இதுதானே மருந்து?

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மொழி மாகாணம் ஒன்றை ஏற்படுத்தி, தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்து இருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

தம்மைத் தாமே ஆளவும், தமது பாதுகாப்பு, முன்னேற்றம், மண்ணின் பாதுகாப்பு, அதன் வளம், அபிவிருத்தி என்பனவற்றைத் தாமே நிர்ணயித்துச் செயற்படுத்தி உறுதி செய்யவும், தமது தாயகமான வடக்கும் கிழக்கும் தனிநாடாக வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்பினார்கள். தங்களது அந்த அபிலாஷையை 1977 இல் நடந்த பொதுத்தேர்தலின் போது எடுத்துச் சொன்னார்கள்.

இப்போது...

1977 ஜூலை முதல் 1987 ஜூலை வரை சரியாகப் பத்து வருடங்கள் கழிந்த பின்னர்—

தமிழர்களில் சுமார் 25,000 மக்களை அழித்தொழித்த பின்னர்—

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகளைச் சேதப்படுத்தியும் தீக்கிரையாக்கியும் நாசம் விளைவித்த பின்னர்—

வடக்கு கிழக்கின் வளமும், வனப்பும் செழிப்பும், பொலிவும் பொசுக்கப்பட்ட பின்னர்—

ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் வாழ்க்கை. தடுப்பு முகாம்களில வைத்து சித்திரவதைகள் மூலம் வேரறுக்கப்பட்ட பின்னர்—

வேறு ஆயிரக்கணக்கான போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர்—

தமிழர்களின் ஒரு சந்ததி மட்டுமன்றி பல சந்ததிகள் இல்லாமற் செய்யப்பட்ட பின்னர்—

அவர்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாகி அவலப்பட்ட பின்னர்—

கிழக்கு மாகாணத் தமிழர்கள் தமது சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டு. அவர்களின் இடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்ட பின்னர்—

தமிழர்களின் கல்விக்கூடங்கள், ஆலயங்கள் மற்றும் நூல் நிலையங்கள் போன்ற பண்பாட்டு நிலையங்களைத் துவம்சம் செய்த பின்னர்—

மொத்தத்தில் தமிழ் இன ஒழிப்பும், தமிழர் கலாசார பண்பாட்டு ஒழிப்பும், தமிழர் மண் பேரழிப்பும் நடத்தி தமிழர் வாழ்வை நிர்மூலமாக்கிய பின்னர்—

ஒட்டு மொத்தத்தில் தமிழர்களை மனிதர்களாக அன்றி, கால்நடைகளையும் விட இழிசனர்களாகக் கருதி, அருவருக்கத் தக்க, அசுரத்தனம் மிக்க கொடுமைகளைச் செய்து வரலாறு காணாத அனர்த்தங்களைப் புரிந்த பின்னர்—

தமிழ் மொழி மாகாணம் — சுயாட்சி என்ற இரண்டு பதங்களை வைத்துத் தமிழர்களை மீண்டும் ஏமாற்றும் முயற்சிகள் முளைகொள்கின்றன.

1958 ஆம் ஆண்டிலாவது (சரி போகட்டும்) மாவட்ட சபைகள் கொண்டு வரப்பட்ட 1981 ஆம் ஆண்டிலேனும் தமிழ்மொழி மாகாண முறை முன்வைக்கப்பட்டிருப்பின், தமிழர்கள் அதனைக் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்திருக்க நியாயமுண்டு.

மேலே பட்டியல் இடப்பட்ட அவலங்கள், அட்டூழியங்கள், நாசங்களை அனுபவித்த பின்னர், கொழும்பின் அரைவாசிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட மாகாண ஆட்சி முறையை தமிழர்கள் 1987இல் எப்படி ஏற்றுக் கொள்வது? அப்படி ஏற்றுக்கொண்டால் தமிழர்கள் ஏமாந்த சோணகிரிகள் ஆகமாட்டார்களா?

இந்தியாவில் உள்ள மாநில ஆட்சிமுறையுடன் ஒப்பிடும்போது, அரசு முன்வைக்க உத்தேசித்திருக்கும், தமிழ்மொழி மாகாண ஆட்சி மிகமிகக் குறைவான அதிகாரப் பரவலாகும்.

தங்களுக்குத் தனிநாடு கேட்ட தமிழர்களுக்கு இந்த அரைகுறை ஆட்சிமுறை பெரிதாக எதனைக் கொண்டுவரப் போகின்றது? அவர்களது அரசியல் நோயைத் தீர்க்க இதுவா மருந்து?

தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஈடாக ஆகக் குறைந்த மாற்றுத் திட்டமாக சமஷ்டி அரசமைப்பே அமைய முடியும். அதுவும்கூட தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட உதவுமா என்பது சந்தேகத்துக்குரியதே.

இவ்வளவு கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்களின் பின்னரும் சமஷ்டி அமைப்பேனும் இல்லாத ஓர் ஆட்சி முறையைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என, தென்னிலங்கை ஆட்சித் தலைவர்களைப்போன்று, இந்தியாவும் எதிர்பார்க்குமாயின் அது கவலைக்குரிய ஒன்றாகும்.

தாங்கள் ஒரு தனி இனமாகச், சுயமாகத் தலைநிமிர்ந்து, பாதுகாப்பாக வாழ்வதற்கு இந்தியா உதவும் என்று எதிர்பார்த்து அதன் துணைநாடி நிற்கும் தங்களை எந்த விதத்திலும் இந்தியா ஏமாற்றி விடமாட்டாது என்றே ஈழத் தமிழர்கள் திடமாக நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை வீண் போகக் கூடாது என்றே நாமும் விரும்புகிறோம்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்திலிருந்து

# இராணுவத் தளங்கள் அகற்றப்பட வேண்டும்

## திவாரி வலியுறுத்து

போர்ட் லூயி, ஜூலை 20

உலக அமைதியை உறுதிப்படுத்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இருந்து இராணுவத் தளங்கள் அகற்றப்பட வேண்டும்.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் என்.டி. திவாரி தெரிவித்தார்.

மொரீஷியஸ் நாட்டில் வெளிநாட்டு அமைச்சர் அளித்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அமைச்சர் திவாரி இதனை வெளியிட்டார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள டியோகா கார்ஸியா தீவு தனக்கு வழங்கப்பட வேண்டும் என்ற மொரீஷியஸின் கோரிக்கை இந்தியாவுக்கு உடன்பாடானதே என்றும் திரு. திவாரி தெரிவித்தார். (இ-எ)

## மீண்டும் தமிழகத்தில் அகதிகள்

சென்னை, ஜூலை 20

கடந்த இரண்டு தினங்களில் இலங்கையில் இருந்து 71 தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தை படகுகளில் சென்றடைந்தனர்.

அகதிகளுக்கு உடன் நிவாரணம வழங்கும்படி அங்கு முகாமிட்டுள்ள தமிழக அமைச்சர் இராமசாமி உத்தரவிட்டார். (உ-எ)

## பதிலடி கொடுக்க தயங்கோம்

சண்டிகார், ஜூலை 20

அயல் நாடுகளுடன் நல்லுறவுடன் வாழவே விரும்புகின்றோம் ஆனால் எம்மைத் தாக்கும் சக்திகளுக்கு பதிலடி கொடுக்க நாம் பின்னிற்க மாட்டோம்.

—இப்படி இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் தெரிவித்தார்.

சண்டிகாரில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனை வெளியிட்டார். (உ-எ)

வெளி உலகில்

## நிக்கரகுவாவின் தேசிய வருமானத்தில் 50 சத வீதம் பாதுகாப்பு நடவடிக்கைக்கு

நிக்கரகுவா, ஜூலை 20

நிக்கரகுவாவின்தேசிய வருமானத்தில் ஐம்பது சத வீதம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கே செலவழிக்கப்படுகின்றது.

இதற்குக் காரணம் கடந்தஏழுஆண்டுகளுக்கு மேலாக இடம்பெறும் கொன்ரா கிளர்ச்சி நடவடிக்கைகளே.

இப்படி நிக்சரகுவா தலைவர் ஜெனரல் ஒட்டேகா தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி பதவிக்கு வந்த எட்டு ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் விழா ஒன்றில் பேசுகையில் ஜெனரல் ஒட்டேகா இதனைத் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான கிளர்ச்சி நடவடிக்கைகள் காரணமாகவெளிநாட்டு ஏற்றுமதி ஐம்பது சத வீதம் வீழ்ச்சி அடைந்து உள்ளது என்றும் ஜெனரல் ஒட்டேகா தெரிவித்தார். (இ-எ)

## தியேட்டர் மீது ஏவுகணைத் தாக்குதல்

காபூல், ஜூலை 20

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் உள்ள சினிமாத் தியேட்டர்மீது நடத்தப்பட்ட ஏவுகணைத்தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

20 பேர்வரையில் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் புதிய அரசமைப்புச் சட்டம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று அச்சினிமாத்தியேட்டரில்நடந்து கொண்டிருந்தபோதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## சோவியத் யூனியனில் 2 அமைச்சர்கள் பதவி நீக்கம்

மாஸ்கோ, ஜூலை 20

சோவியத் யூனியனில் இரண்டு அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

தலைவர் மிக்செய்ல் கோர்ப்பச்சேவின் சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றி கடுமையாக விமர்சித்ததற்காகவே இருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர் என்று பி. பி. சி. தெரிவித்தது.

கனரக போக்குவரத்து அமைச்சராக இருந்தவரை கட்டாய லீவில் செல்லும்படி உத்தரவிடப்பட்டது.

விவசாய அமைச்சராக இருந்தவர், மாநிலம் ஒன்றில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். (இ-எ)

## முறையிட்டால் அது சட்டவிரோத நடவடிக்கையா?

### முகமட்கான் கேட்கிறார்

புதுடில்லி, ஜூலை 20

பொருளாதாரக் குற்றங்கள் புரிந்தோர் பற்றி முறையிடுவது கட்சி விரோத நடவடிக்கையா?

முன்னாள் இந்திரா காங்கிரஸ் அமைச்சர் ஆரிப் முகமட்கான் முன் கண்டவாறு கேட்டார்.

முன்னாள் நிதி அமைச்சரும் பாதுகாப்பு அமைச்சருமான வி. பி. சிங்கை இந்திரா காங்கிரஸில் இருந்து வெளியேற்றியது சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் ஆரிப் முகமட்கான் இக்கேள்வியை எழுப்பினார்.

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் என்பதற்காகவே திரு வி. பி சிங் விலக்கப்பட்டார் என்று இந்திரா காங்கிரஸ் காரணம் காட்டியுள்ளது தெரிந்ததே.

கட்சியில் இருந்து வெளியேற்றும் முடிவு தனக்கு வியப்பைத் தந்துள்ளதாக திரு. சிங் கருத்து வெளியிட்டார்.

## ஹங்கேரியிலும் பொருளாதார நெருக்கடி

புடாபெஸ்ற், ஜூலை 20

ஹங்கேரி அரசு நுகர்ச்சிப் பொருள்களின் விலைகளை வெகுவாக அதிகரித்துவிட்டது.

நாட்டில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவே இவ்விலை உயர்வு கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது (இ-எ)

## இந்தியாவிலும் டாக்டர்கள் வேலை நிறுத்தம்

இந்தியாவில் மத்திய சுகாதார நிலையங்களில் பணிபுரியும் எண்ணாயிரம் டாக்டர்கள ஞாயிறு நள்ளிரவு முதல் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

சில கோரிக்கைகளை முன்வைத்து டாக்டர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர்.

இதனால் புதுடில்லியில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகள் பாதிக்கப்பட்டன.

## வன்செயல்கள் குறித்து விளக்கம்

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் தீவிரவாத வன்செயல்கள் பற்றி இரண்டு முக்கிய ஆபிரிக்கத் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட இருக்கின்றது.

சாம்பிய ஜனாதிபதி கெனத் கவுண்டா, கென்யா ஜனாதிபதி அரப்மொயி ஆகியோருக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன கல்வி அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா மூலம் செய்திகளை அனுப்பி இருக்கின்றார். (உ-எ)

சமய சந்நிதிகளில்

## அனலைதீவு ஐயனார்கோயில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

அனலைதீவு ஐயனார் கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 9ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

அதனையடுத்து 10ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவுபெறும். (இ-7)

## கலட்டியில்

யாழ்ப்பாணம், ஜூலை 21

கலட்டி எச்சாட்டி மகாமாரிஅம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியது.

உற்சவம் 15 நாட்கள் நடைபெறும்.

வழமையில் மாலையில் நடைபெறும் தேர், தீர்த்தம் உற்சவங்கள் இம்முறை காலையில் நடைபெறும். (இ-10)

★ புதிய யோசனைகள் குறித்து

# கொழும்பு அரசு வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள குமுறல்கள்

வடக்கு — கிழக்கு இணைப்புப் பற்றிய புதிய யோசனை உருவானதைத் தொடர்ந்து கொழும்பு அரசு, அரசியல் வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள நிலை, மற்றும் பின்னணித் தகவல்களை 'சண்டே டைம்ஸ்' வெளியிட்டிருக்கின்றது.

அதன் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

நாட்டின் அரசியலில் நாற்பது ஆண்டுகளாக புரையோடிப்போயுள்ள 'புற்று நோய்' இனப் பிரச்சினை.

அதை அவசரச் சத்திர சிகிச்சை மூலம் அகற்றுவதற்கு முன்னர் டாகடருடன் நடத்தும் சந்திப்பைப் போன்று இருந்தது கடந்த வியாழன் கொழும்பில் இடம் பெற்ற ஆலோசனை.

கொழும்பில் இருந்த அமைச்சர்களையே ஜனாதிபதி இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைத்து இருந்தார்.

வடக்கு, கிழக்குக்கு ஒரு மாகாணசபை என்னும் திட்டம் பற்றி அங்கு ஆராயப்பட்டது.

இது பற்றிய இந்தியக் கொள்கை சம்பந்தமான கேள்விகளுக்குப் பதிலளிக்க இந்தியத் தூதர் டிக்ஸிட்டும் கையோடு அங்கு இருந்தார்.

1. வடக்கு – கிழக்கு இணைக்கப்பட்டுதனி மாகாணசபை—

2. தொடர்ந்து இணைந்து இருக்க விருப்பமா என்பதை அறிய கிழக்கில் ஓராண்டு கழித்து சர்வசன வாக்கெடுப்பு—

இவை குறித்து எளிதில் புரிந்து கொள்ள முடியாத உணர்வுகள் நிலவுகின்றன.

இது குறித்து ஒரு அமைச்சர் கிண்டலாகக் கேட்கிறார்;

''இந்த சர்வசனவாக்கெடுப்பு.இந்தியாவுடன் தொடர்ந்து இருக்க விருப்பமா என்பதை அறிய காஷ்மீரில் நடத்தப்படும என்று கூறப்பட்ட சர்வசன வாக்கெடுப்புப் போன்று தான் அமையுமா?

கிழக்கில் உள்ள 2 லட்சத்து 70 ஆயிரம் சிங்கள மக்களுக்கும் 3 லட்சத்து 70 ஆயிரம் முஸ்லிம்களுக்கும் என்ன நடக்கும்?''

'ஐக்கிய மாகாண சபை என்றால் உள்ளூரில் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு தமிழர் கைகளில் இருக்கும். மாகாணசபைகள் சட்டம் அதற்கு வழிவகுக்கின்றது. அப்படியான நிலையில் சுதந்திரசர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடியுமா?

வேறு சில அமைச்சர்கள் கேட்கின்றனர்.

'இவ்வளவு காலமும் நடந்து வந்த பேச்சு வார்த்தைகளை உடைத்த அதே வடக்கு கிழக்கு இணைப்புத்தானே இப் புதிய யோசனை?'

இன்னும் ஓர் அமைச்சர் கூறுகிறார். 'வேறு லேபலுடன வரும் அதே மருந்துதான் இது குளிகை கசப்பாக உள்ளது. மருந்தைக் கொடுப்பதற்கான நிலைமை சரியானதாக இல்லை.'

இன்னொரு அமைச்சர் 'திம்புவில் நிராகரிக்கப்பட்ட தமிழர் தாயகக் கோட்பாடு வேறு உருவத்தில் வருகின்றது' என்கிறார்.

'ஓநாய், ஆட்டின் போர்வையில் வருகின்றது. இருந்தும் அது ஓநாய்தான்'— அந்த அமைச்சர் வெறுப்புடன் சொல்கிறார்.

அந்த அமைச்சர் மேலும் சொல்கிறார்:

'இதை மக்கள் ஒருகாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

'இதை எதிர்த்துத் தானே ஜனாதிபதி ஜெயவர்த்தன 1958 இல் யாத்திரை சென்றார்'

'இதற்காகத் தானே இந்த யுத்தம் நடைபெறுகின்றது. இந்த யுத்தத்திலெத்தனை இளம் உயிர்கள் தியாகம் செய்யப்பட்டுள்ளன'—

ஆனால் புதிய யோசனையைக் கொண்டு வந்தவர்கள்' பலமான நிலையில் இருந்து வாதிக்கின்றார்.

''தீம் பிக்கையில் உள்ள நீரை பீறிட்டுப் பாய்ச்சுவதன் மூலம் பெரிய வேட்டைக்காரர்களைத் தடுத்து நிறுத்தி விடலாம் என்று நினைக்கும் யானைகள் போல் நாம் நடந்தகொள்கின்

(4 ஆம் பக்கம்



**பொய்யாமொழி**

**குறள்:**

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

**பொருள்:**

(ஒருவனைப் பற்றி ஒன்றும் ஆராயாமல் தெளிந்தால் அஃது (அவனுக்கு மட்டும் அல்லாமல்) [illegible] அவனுடைய வழிமுறையில் தோன்றியவர்க்கும் தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வித்தாரம்

என்ன இரண்டு நாளாய் வந்து போனியாம். ஓ, தெரியாதே, சில வேலையளிலை சில வேலையளைத் தள்ளிப் போடமுடியாது அதாலை இரண்டு நாளாய் நீ ஏமாந்திட்டாய்!

உண்மையைச் சொன்னால் என்ன? நகரிலை, நல்லூரிலை மூண்டு நாளாய் கம்பன் விழா. முதல் நாள் போக முடியயில்லை. அதாலை அடுத்த இரண்டு நாளும் ஒருக்கா எட்டிப் பார்ப்போம் எண்டு யோசினை வந்திட்டுது

ஷெல்லடி, அது இது. இருபதாம் திகதி (அது தான் நேற்று) ஏதோ ஒப்பறேஷன்களுக்கு ஆயத்தம் எண்டு சில பேர்சென்ஷேஷனும் புளுகும் அடிச்சகுழ்நிலையிலை, கம்பன் விழா அவசியம் தானா, அது நடக்குமா, ஆள் சேருமா எண்ட நிலையிலை தான் கம்பன் விழாவுக்குத் திகதி நிர்ணயிச்சவை எண்டு கேள்வி.

ஆனால் சனம் எண்டால் சனம் தான்! அந்தக்கடைசி நாள் ஞாயிறுக்கிழமை நல்லூர்த் தேர்த் திருவிழா தோத்துப் போச்சோ எண்டு எண்ணுற அளவுக்குச் சனக் கூட்டம்!! அப்ப தான் ஒரு விஷயத்தைப் புரிஞ்சு கொள்ளக் கூடியதாய் இருந்திது.

மேளம், சின்னமேளம், நாடகம், நாட்டியம் போன்ற கலை நிகழ்ச்சிகளை மட்டுமில்லாமல், அறிவுக்கு விருந்தூட்டும் இலக்கியம் தத்துவம் போன்ற விஷயங்களிலையும் சனத்துக்கு இப்ப ரசனை கூடியிருக்குது எண்டதற்குக் கம்பன் விழாவுக்கு வந்த சனக் கூட்டம் சாட்சி!

சனத்தொகையிலை பெண்களே அதிக எண்ணிக்கையாக இருப்பதாலோ என்னவோ பெண்கள் கூட்டமே கம்பன் விழாவிலும் அதிகமாய் இருந்திது.

கனநாளைக்குப் பிறகு இப்பிடி ஒரு பொழிப்பான விழா நடக்கிறதாலை சனக் கூட்டம் அதிகம் எண்டு ஒருசிலர் வாதம் புரியினம்.

சனம் நெடுக ஹெலி அடி, பொம்மர் அடி, நகரத்திலை 'ஒப்பறேஷன் லிபரேஷன்' நடக்கப் போகுது எண்டு ஒரே பயமும் பதட்டமும் அடைஞ்சு இருந்ததாலை, இது ஒரு மன அமைதியைத் தரும் எண்டதாலை அதிக அளவிலை கூடிச்சிது எண்டு இன்னும் சிலர் காரணம் காட்டிச்சினம்.

அதுகளும் காரணங்களாய் இருக்கலாம். எண்டாலும்கம்பன்விழாவை ஏற்பாடு செய்த இளைஞர்களின் கெட்டித்தனம்தான் கம்பன் விழாவுக்கு அத்தனை சனக் கூட்டம் கூடுவதற்குக் காரணம் எண்டு நான் சொல்லுவேன்...! அவர்கள் நிகழ்ச்சிகளை நடத்திய விதம் எல்லோரையும் கவர்ந்திழுத்தது!

இந்தக் கஷ்டமான நேரத்தில் கம்பன்விழா வேணுமே தானோ எண்டு கேட்டவைக்கு இந்த நேரத்துக்கு இதுபோன்ற விழாதான் அவசியம் எண்டு பதில் கிடைக்குமாப் போலை வலுவலாதியாய் விழா நடந்திச்சுது!

கருத்தரங்கம் என்ன கவியரங்கம்என்ன பட்டிமண்டபம் (இலக்கிய நீதிமன்றம்) என்ன?

நீதிபதிகள்,வழக்குரைஞர்கள் இருக்கிறதுக்கு சங்ககாலப் பாணியில் அமைந்த ஆசனங்கள், எல்லாமே கண் கொள்ளாக்காட்சிதான். பேராசிரியர்கள், புலவர்கள் வித்துவான்கள், கவிஞர்கள் எண்டு ஒரே கருத்துக்கருவூலங்கள். காதுக்கும் அறிவுக்கும் தேன் குழைத்துக் கொடுத்த விருந்துகள். கம்பநாடான் வந்து பார்த்திருந்தால்களிபேருவகை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

21-07-1987 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

## சிப்பாய் பலி! காதலி தற்கொலை!!

### சடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன

வவுனியா, ஜூலை 21
போராளிகளின் தாக்குதலில் காயமடைந்து பின்னர் உயிரிழந்த தனது காதலனான சிப்பாயின் இழப்பைத் தாளாமல், காதலியும் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக் கொண்டாள். இருவரது இறுதிக் கிரியைகளும் ஒரே வேளையில் நடைபெற்று சடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

சிலதினங்களின் முன்பு குருநாகலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

முந்திரிகைக் குளத்தில் அண்மையில் இடம் பெற்ற இராணுவம்-போராளிகளின் மோதலில் சிறிவர்தன என்ற சிப்பாய் காயமடைந்தார். கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு அங்கு சிகிச்சையளிக்கப் பட்டது. எனினும் வைத்தியசாலையில் அவர் உயிரிழந்தார்

சடலம் அவரது சொந்த ஊரான குருநாகலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது

இவரது இறப்பை அறிந்த அவரது 18வயது காதலியும் காதலன் இறந்த துயரத்தைத் தாங்கமுடியாமல் தானும் நஞ்சருந்தி உயிரை மாய்த்துக் கொண்டாள்.

இருவரது சடலங்களும் இறுதிக் கிரியைகளின் பின் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (உ-164)

## மீண்டும் ஊரடங்கு

குருநகர், ஜூலை 21
இரண்டு நாள் ஓய்வின் பின்னர் மீண்டும் பத்துமணி நேர ஊரடங்கு நேற்றுத் திடீரென யாழ் குடாநாடெங்கும் பிறப்பிக்கப்பட்டது.

இரவு 7 மணியில் இருந்து இன்று அதிகாலை 5 மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப்படுமென நேற்று மாலை 5 மணி ஒலிபரப்பில் யாழ்ப்பாண வானொலி தெரிவித்தது. (இ)

முதலில் வன்செயல் நிறுத்தப்பட வேண்டும்

# அரசமைப்புக்கு இசைவான தீர்வையே ஏற்க முடியும்

## பிரேமா அறிவிப்பு

டோக்கியோ, ஜூலை 21
இலங்கை இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் எமது நாட்டின் அரசமைப்பிற்கும் ஒற்றை ஆட்சி முறைக்கும் அமைவானதாகவே இருக்க வேண்டும். அத்தகைய தீர்வையே ஏற்றுக் கொள்ள முடியும்.

–ஜப்பானுக்கு விஜயம் செய்திருக்கும் பிரதமர் ஆர். பிரேமதாஸா இப்படித் தெரிவித்தார்.

ஜப்பான் என். எச். கே. டெலிவிஷனுக்கு அவர் நேற்றுப் பேட்டியளித்தார்.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதற்கான வழிகள் பிறந்திருப்பதாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்திருக்கிறார் அது பற்றி உங்கள் கருத்து என்ன''?— இப்படிப் பிரதமரிடம் வினா எழுப்பப்பட்டது.

பிரதமர் கூறிய பதில் வருமாறு:-

கடந்த 10 ஆம் திகதி நான் இலங்கையை விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இத்தகைய ஏற்பாடுகள் பேச்சுக்கள் குறித்து நான் ஏதும் அறிந்திருக்கவில்லை.

பேச்சுவார்த்தை எத்தகையதாக இருந்தாலும் அரசியல் பிரச்சினைக்கு எமது அரசமைப்பின் கீழ்த்தான் தீர்வு கண்டாக வேண்டும்.

எமது அரசமைப்பில் ஒற்றை ஆட்சி முறை தெளிவாக வலியுறுத்தப் பட்டிருக்கிறது எமது அரசமைப்பி கீழ் தனிநாடு எதனையும் உருவாக்க முடியாது.

எந்தத் தீர்வை காண்பதானாலும் முதலில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட வேண்டும் வன்செயல்கள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

இப்படி பிரதமர் பதிலளித்தார்.

இதேவேளை விமானம் மூலம் உணவுப்பொதிகளை யாழ் குடாநாட்டில் இந்தியா விநியோகித்தது ஒழுக்கங்கெட்ட செயல் என பிரதமர் பிரேமதாஸ டோக்கியோவில் வைத்துத் தெரிவித்தார்.

ஜப்பான் செய்திஸ்தாபனத்துக்கு அளித்த மற்றொரு பேட்டி ஒன்றிலேயேபிரதமர் இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிராகவே எமது அரசின் இராணுவம் போராடுகின்றது.

தற்போதைய பிரச்சினை இன ரீதியானது என்றால் அதற்குத் தீர்வு காண முடியும்.

இலங்கை ஒரு சிறிய நாடு. பெரியநாடு என்பதால் எம்மை இந்தியா மிரட்டி வருகின்றது. இதற்கு நாம் இடங் கொடுக்கமாட்டோம்.

இப்படி பிரதமர் மேலும் சொன்னார். (உ-எ)

## டாக்டர்களுக்கு ஆதரவாக

# தாதிமார் இன்று முதல் சட்டப்படி வேலை

கொழும்பு, ஜூலை, 21
வேலை நிறுத்தம்செய்து வரும் டாக்டர்களுக்கு ஆதரவாக அரச தாதிமார்கள் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை செவ்வாய் (இன்று) முதல் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

தாதிமார் சங்கத் தலைவர் வண. மொரத்தெட்டுவ ஆனந்த தேரர் இத்தகவலை வெளியிட்டார்.

டாக்டர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து 21 எதிரணி தொழிற்சங்கங்கள் நாளை (புதன்) நண்பகல் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

இதனிடையில் அரசு மருத்துவமனைகளில்பணி புரிய 65க்கு மேற்பட்ட தனியார் டாக்டர்களுக்கு அனுமதியளிக்கப் பட்டுளளது.

தனியார் டாக்டர்கள் வேலை செய்தால் தாங்கள் ஒத்துழைக்கப் போவது இல்லை என்று தாதமார்கள் சங்கம் அறிவித்துள்ளது. (இ-எ)

## படையினரைக் கண்டு ஓடவேண்டாம்

### ஜீ.சி.ஈ. பரீட்சை மாணவருக்கு யாழ் வானொலி அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 21
நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவர்களைக் கண்டு நீங்கள் பயந்து ஓட வேண்டாம்

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வடமராட்சி மாணவர்களை யாழ்ப்பாண வானொலி மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டுள்ளது.

கூட்டமாக ஐந்து பேர்களுக்கு மேல் பரீட்சை மண்டபத்திற்குப் போக வேண்டாம்.

உங்கள் அடையாளக் கார்ட்டுகளை பாதுகாப்புப்படையினர் பரிசீலனை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் என்றும் யாழ் வானொலி கேட்டுக் கொண்டுள்ளது. (இ-ரி)

## கே. எம் பிக்கு காலம் கடந்து பிறந்த ஞானம்

கொழும்பு, ஜூலை 21
சிங்களவர், தமிழ் மொழியைப்படிப்பதற்கு இன்னும் காலம் பிந்த வில்லை.

வெலிமடையின் முன்னாள் எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தின மேற்கண்டவாறு சொன்னார்.

ஹாலி-எலவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் திரு. ராஜரத்தின முன் கண்ட ஆலோசனையை வெளியிட்டார்.

நாட்டு மக்கள் அனைவரும் எல்லா மொழிகளையும் பேசக் கற்று இருந்தால், நாட்டின் அரைவாசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டிருக்க முடியும்.

இனியாவது சிங்களவர் தமிழ் மொழியைப் படிக்க வேண்டும்.

இப்படி திரு. ராஜரத்தின மேலும் சொன்னார். (இ-எ)

## பெண்ணுக்கும் சிப்பாய்க்கும் மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை21
நேற்று மூதூர் இராணுவ முகாமுக்கு அருகில் ஒரு பெண் துரோகிக்கு எம்மவர்கள் தண்டனை வழங்கச் சென்ற சமயம், அங்கு அப்பெண்ணுடன் காணப்பட்ட ஓர் இராணுவ வீரரும் எம்மால் கொல்லப்பட்டார்.

அப்பெண்ணுக்கும் மரணதண்டனை வழங்கப் பட்டது என்று புலிகளின் அறிக்கை தெரிவிக்கிறது. (இ)

## கிராமசேவகர் பயிற்சி வகுப்பு

வேலணை. ஜூலை 21
யாழ் மாவட்டத்தில் விசேடசேவை அலுவலர்களாக கடமையாற்றி கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் பெற்ற 78 கிராமசேவை அலுவலர்கட்கான பயிற்சி வகுப்புக்கள் நேற்றுக்காலை 8 30 மணிக்கு யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

இப்பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து இன்றும் நாளையும் நடைபெறும். (உ-167)

## கண்ணிவெடி 4 சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 21
நேற்று மாலை 4-30 மணி அளவில் ஆலங்குளத்துக்கு முருங்கனிற்கும் இடையே கட்டையடம்பனுக்கு அருகில் வைத்து இராணுவம் சென்று கொண்டிருந்த ஜீப்மீது எம்மால் கண்ணி வெடித்தாக்குதல் நடத்தப்பட்டது,

இச்சம்பவத்தின் போது 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், ஜீப் முற்றாகச் சேதமடைந்தது.

ஜீப்பின் பின்னால் நடந்து வந்த பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இவ்வாறு புலிகளின் அறிக்கை தெரிவிக்கிறது.

## கொழும்பு..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)
ரோம்''—இப்படி ஓர் அமைச்சர் வாதாடுகின்றார்.

அவர் மேலும் சொல்கின்றார்:

''புவியியல் அரசியலின் உண்மை நிலையை நாம் எதிர்நோக்க வேண்டும்.

இந்திய உதவி இன்றி நாம் ஒரு போதும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. மாகாண சபைகளுக்கு இந்திய மாநிலங்கள் அனுபவிக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்; கூடுதலாக வழங்கத் தேவை இல்லை—

இப்படி இந்தியா இன்னும் கூறுகின்றது. எத்தனையோ நடந்த பின்னரும் அவர்கள் உதவத் தயாராக இருக்கின்றார்கள்''—

இப்படி அவர் சொல்கின்றார்

இந்தியா விதித்துள்ள நிபந்தனைகள் என்ன?

முதலாவது உண்மை நிலை:-

இலங்கை இராணுவத்தினால் யாழ்ப்பாணம் பட்டினத்தைக் கைப்பற்ற ஒருபோதும் இந்தியா அனுமதிக்காது.

இரண்டாம் உண்மை நிலை:-

அர்த்தமுள்ளயோசனைகள் இருப்பின் தீர்வு ஒன்றைக்காண இந்தியா, இலங்கைக்கு உதவும் என்பது. (வளரும்)

## வித்தாரம்---

(3-ம் பக்கத்தொடர்ச்சி)
கொண்டிருப்பான்!

இந்தியாவிலை சங்கீத விழாக்கள்— இலக்கிய விழாக்கள் எண்டு மூண்டு நாலு நாளாய் களை கட்டி நடக்கும். அதைப் போலை யாழ்ப்பாணத்திலும் நடத்தலாம் எண்டதுக்குக் கம்பன் விழா நல்ல உதாரணம்.

எங்கடை அரசியலைப் பொறுத்தமட்டிலை இப்ப கம்பராமாயண காலம். அதாலை கம்பன்விழா நல்லபொருத்தம்! கல்விக்குக் கம்பன் என்பார்கள். கல்விக்குப் பேர் போன யாழ்ப்பாணத்திலை கம்பன் விழா சே.. டைதான்போகுமா?

## தென் இலங்கையில் ஆர்ப்பாட்டம் ஏதும் நடத்தப்பட வில்லையே

### தமிழர் கொலையை கண்டித்து

### சண்முகதாஸன் கண்டனம்

கொழும்பு, ஜூலை21
வடபகுதியில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளினால் அப்பாவி மக்கள் படுகொலையாவதைக் கண்டித்து தென் இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்த வில்லையே.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இடதுசாரி இயக்கத்தில் இருந்து வருபவன் என்ற முறையில் நான் வெட்கித்தலைகுனிகின்றேன்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (சீனசார்பு) யின் பொதுச் செயலாளர் திரு. என். சண்முகதாஸன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''இன்றைய உடனடித் தேவை ஒரு பொதுத் தேர்தலா?''- என்ற தலைப்பில் கொழும்பு கோட்டை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசியபோது திரு. சண்முகதாஸன் இப்படிக் கவலை தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கிலே இடம்பெறும் அடக்குமுறைக்கு எதிராக ஒரு வார்த்தைதானும் பொதுத்தேர்தல் வேண்டாம் என்று கோரும் ஆறு கட்சிகளும் இங்கு கூறவில்லை.

இந்த நிலையில் இன்று [illegible] என்னைக் கேட்டால் ''தமிழர் பிரச்சினைக்கான தீர்வே'' — என்று பதில் கூறுவேன்.

இப்படி திரு. சண்முகதாஸன் தெரிவித்தார். இக்கருத்தரங்கில் கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன், ஸ்ரீ லங்கா மக்கள் கட்சித் தலைவி திருமதி சந்திரிகா விஜயாகுமாரணதுங்க, சுதந்திரக்கட்சி எம். பி. அனில் முனசிங்க, நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரா, தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், ஜ. தொ. கா. தலைவர் ஏ. அஸீஸ் ஆகியோரும்கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். (இ-எ)

## நேற்று நடந்த அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இம்மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமைமுதல் நடத்தப்படவுள்ள ஜி சி ஈ. உயர்தரப் பரீட்சைக்கான கடமைகளில் ஈடுபடும் யாழ் மாவட்டப் பரீட்சை நிலையங்களின் உத்தியோகத்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நேற்று திங்கட்கிழமை யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்த அறிவுறுத்தல் கூட்டத்தில் பரீட்சைத் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. எஸ். சின்னத்துரை, யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி ஆகியோர் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள், பரீட்சையின் நடைமுறைகள் பற்றிய அறிவுரைகளை வழங்கினர். (இ-161)

## தமிழீழ---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
சந்திப்பின்போது தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இதேவேளை ஈழத் தமிழர்களின் தேசியத் தலைவராகத் திரு. பிரபாகரனை ஏற்றுக்கொள்ளவும் இந்தியா விருப்பம் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதாம்.

திரு. பிரபாகரன் இந்தியாவுக்குச் செல்வதாலும், கொழும்புக்குச் செல்வதாலும், சட்டரீதியான முறையில் ஒரு தலைவனுக்கு உரிய சம்பிரதாயங்களுடன் செல்ல வழி செய்து கொடுப்பது குறித்தும் [illegible] சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாகவும் அறியவந்தது. (அ-10)

## வடமராட்சியில் அவசர நிவாரணம்

யாழ்ப்பாணம். ஜூலை 21
வடமராட்சிப் பகுதியில் எஞ்சியுள்ள 30 ஆயிரம் அகதிகளுக்கு கடந்த சனி, ஞாயிறு தினங்களில் அவசர அவசரமாக நிவாரணப் பொருள்கள் வழங்கப் பட்டன.

1 கிலோ அரிசி, 1 கிலோ மா, ½ கிலோ சீனி என்ற அடிப்படையில் நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டன. (இ-10)

## செட்டிகுளத்தில் 6 சிப்பாய்கள் பலியாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை21
ஞாயிறுகாலை செட்டிகுளம் இராணுவ முகாமிலிருந்து மதவாச்சிக்கு 1 மினிபஸ், 1 ஜீப், மற்றும் டிரக் என்பனவற்றில் சென்று திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது செட்டிகுளத்துக்கு அருகில் வைத்து புலிகளால் திடீர் தாக்குதல் நடத்தப் பட்டது.

இத் தாக்குதலின்போது இராணுவ வாகனங்களுக்குப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

புலிகள் தரப்பில் இருவர் சிறுகாயமடைந்துள்ளனர்.

—இவ்வாறு புலிகள் தரப்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது. (இ)

## வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை21
ஞாயிறு இடம்பெற்ற வெடி விபத்தின்போது வீரமரணமடைந்த கென்னடி, சுரேஸ் ஆகியோருக்கும் சனிக்கிழமை மாவிட்டபுரத்தில் வீரமரணமடைந்த காங்கேசனிற்கும் (சின்னண்ணு) எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படி புலிகள் தரப்பில் அறிக்கை விடப்பட்டுள்ளது. (இ)

## அலஸ்- -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
பாதிக்கப்பட்டோர் அல்லது பாதிக்கப்படோரின் உறவினர்கள் நாளை 22 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணை அலஸ்ஆணைக் குழுவினால் நாளை மறுதினம் 23 ஆம் திகதியும் 24ஆம் திகதியும் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருப்பது தெரிந்ததே. (இ-161)

## யாழ்ப்பாண -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தது.

வன்செயல்கள் எப்படியாவது நிறுத்தப்பட வேண்டும், வடக்கு கிழக்குப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வீடுகள் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்று தூதுக்குழு கூறியது. (இ-எ)

## பெண்கள், பிக்கு உட்பட 10 பேர் தடுப்புக் காவல்

கொழும்பு, ஜூலை 21
கட்டுநாயக்கா விமானத் தள தாக்குதல் சம்பவம் குறித்து 2 இளம் பெண்கள், ஒரு பிக்கு உட்பட பத்துப்பேர் மீது கொழும்பு கோட்டை நீதிவான் தடுப்புக்காவல் உத்தரவைப் பிறப்பித்தார்.

இரகசியப் பொலீஸார் பத்துப்பேரையும் கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

பின்னர் சந்தேக நபர்களை தொடர்ந்து தடுத்து வைக்க அனுமதி கோரி இரகசியப் பொலீஸார் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நீதிமன்றம் அனுமதித்தது. (இ-எ)

## இருவர் காயம்

குருநகர், ஜூலை 21
நேற்றுக் காலை பத்து மணியளவிலும், மாலை நான்கு மணியளவிலும், சின்னக்கடை பாங்ஷால் வீதியில் வைத்து இருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு இலக்காகினர்.

யாழ் பொலீஸ் நிலைய 'சென்றி'யில் இருந்து கோட்டை இராணுவம் நடத்திய துப்பாக்கி வேட்டுக்கே மேற்படி இருவரும் காயமடைந்தனர். (உ-ரி)

## கோரிக்கை

வளைகுடா பற்றி தீர்மானம் எடுப்பதற்காகக் கூடும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்தை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திப் போடும்படி ஈரான், மேற்கு ஜேர்மனியைக் கேட்டு உள்ளது. (அ-எ)

## காணவில்லை



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சண்முகம் வேலும்மயிலும் (50 வயது) 26-6-87ல் இருந்து காணவில்லை. இவரைப்பற்றித் தகவல் ஏதும் தெரிந்தால் நாகராசா வீடு, மாமுனை, செம்பியன் பற்று என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (1295)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 21-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Tuesday July 21. 1987

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org